| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>சிவக்குமார் | அ.வ.எண். 289/11 | 06.02.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

பி.வா.சா.ஆ.18 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எனது தாயார் எந்த சொத்துக்களை பாத்தியப்படுத்தினார் என்றால் தாவா சொத்துக்களை பாத்தியப்படுத்தினார். தாவா சொத்தானது அனந்தாயி அம்மாள் எழுதிவைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று தான் கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான்.

எனது தகப்பனார் உயில் மூலம் தனக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களை பொறுத்து ஏதேனும் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்துள்ளார். என்ன ஆவணம் எனது தகப்பனார் எழுதி வைத்துள்ளார் என்றால் எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். எனது தாயாருக்கு செட்டில் மெண்ட் ஆவணம் ஏன் எழுதிவைத்தார் என்றால் எனது தாயார் பிரியப்பட்டு எழுதிவைத்தார். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தை முன்பே ஏன் நீதிமன்றத்தில்ர தாக்கல் செய்யவில்லை என்றால் காரணம் எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ.18 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு தான் பி.வா.சா.ஆ.19 பட்டா வாங்கினேனா என்றால் இல்லை. அதற்கு முன்பே எனது தகப்பனார் பெயரில் பட்டா இருந்தது.

மேற்படி பட்டா யார் யார் பெயரில் இருந்தது என்றால் எனது தகப்பனார் பெயரில் மட்டும் தான் உள்ளது. எனது தகப்பனார் பேரில் உள்ள பட்டா மற்றும் பி.வா.சா.ஆ.18 ஆவணத்தை வைத்து தான் பி.வா.சா.ஆ.19 பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 2012 ல் வழக்கிற்கு பின்னிட்டு தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பாக

2010 லேயே கட்டிட அனுமதி பெற்றுள்ளேன். பி.வா.சா.ஆ.21 ஆவணம் 2013 ல் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கினேன் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.22 ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான், வருடாவருடம் செலுத்தி வருகிறேன். பி.வா.சா.ஆ.23 2012 ம் ஆண்டில் ஏற்பட்டது என்றால் சரிதான். அனந்தாயி அம்மாள் என் தகப்பனாருக்கு எந்த உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் நாங்களாகவே தயார் செய்து கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது பொய்யான கட்சிக்கு வலு சேர்க்கவேண்டும் என்பதற்காக தான் பி.வா.சா.ஆ.18 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 ஆவணத்தின் அடிப்படையில் தான் மற்ற ஆவணங்களும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்ததக்கது என்றாலும் எனது கட்சி பொய்யானது என்றாலும் சரியல்ல.

வழக்கு 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 12.02.2024 அஅன்று ஒத்திவைக்கப்படுகிறது.